பதிவெண் : | | | | | | |

# மாதிரித்தேர்வு - I ஜனவரி - 2020

**10-ம் வகுப்பு** **தமிழ்**

மதிப்பெண்கள் : 100

நேரம் :15 நிமிடம் + 2.45 மணி

பகுதி - I

i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

ii) கொடுக்கப்பட்ட நான்கு விடைகளில் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

15 x 1 = 15

1) மெய்நிகர் உதவியாளரை 'இங்கிவனை யான் பெறவே என்ன தவம் செய்துவிட்டேன்' என்று _______________ மெச்சுவது போல மெச்சிக்கொள்ளலாம்.

அ) பாரதிதாசன் ஆ) பாரதியார் இ) கண்ணதாசன் ஈ) வைரமுத்து

2) 'கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது' - இத்தொடரில் இடம் பெற்றுள்ள தொழிற் பெயரும் வினையாலணையும் முறையே.

அ) பாடிய, கேட்டவர் ஆ) பாடல் பாடிய இ) கேட்டவர் பாடிய ஈ) பாடல் கேட்டவர்

3) தடக்கை - இச்சொலின் இலக்கணக் குறிப்பு –

அ) உருவகம் ஆ) உவமைத்தொகை இ) உரிச்சொல்தொடர் ஈ) வேற்றுமைத்தொகை

4) சிலப்பதிகாரமும் மணிமேகலையும் _____________ பாவால் அமைந்துள்ளன.

அ) வெண்பா ஆ) கலிப்பா இ) ஆசிரியப்பா ஈ) வஞ்சிப்பா

5) மொகு சாஸ்ட்டு – என்ற ஜப்பானிய சொல்லுக்கு அமெரிக்கர்கள் எடுத்துக்கொண்ட பொருள்_________.

அ) விடைதர அவகாசம் வேண்டும் ஆ) மறுக்கிறோம் இ) பெரும் புயல் ஈ) நன்றி வணக்கம்

6) திருவிளையாடற் புராணத்தை இயற்றியவர் _______________.

அ) சேக்கிழார் ஈ) இளங்கோவடிகள் இ) பாரதியார் ஈ) பரஞ்சோதி முனிவர்

7) 'மாபாரதம் தமிழ்படுத்தும் மதுராபரிச் சங்கம்' வைத்தும் என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி. அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஆ) பக்தி இலக்கிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

இ) காப்பிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

8) நாடகக் கலையை மீட்டெடுப்பதே தமது குறிக்கோள் என்றவர் _____________.

அ) அறிஞர் அண்ணா ஆ) சிவாஜி இ) ந.முத்துசாமி ஈ) அவ்வை சண்முகம்

9) எவ்வகைப் பொருளும் மெய்வகை விளக்குஞ் சொன்முறை தொடுப்பது _________.அணி

அ) உவமை ஆ) உருவகம் இ) தீவகம் ஈ) தன்மை

10) இவள் தலையில் எழுதியதோ கற்காலம்தான் எப்போதும். இவ்வடியில் கற்காலம் என்பது

அ) தலைவிதி ஆ) பழைய காலம் இ) ஏழ்மை ஈ) தலையில் கல் சுமப்பது

11) அழைப்புமணி ஒலித்ததால் கயல்விழி கதவைத் திறந்தார் - இஃது எவ்வகைத் தொடர

அ) தனித்தொடர் ஆ) தொடர் சொற்றொடர் இ) கலவைத்தொடர் ஈ) பிறவினைத் தொடர்

<u>பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக:</u>

"அன்று அவண் அசைஇ, அல்சேர்ந்து அல்கி
கன்று எரி ஒள்இணர் கடும்பொடு மலைந்து
சேந்த செயலை செப்பம் போகி"

12) இப்பாடல் இடம் பெற்றுள்ள நூல்

அ) காசிக்காண்டம் ஆ) மலைபடுகடாம் இ) பாரிபாடல் ஈ) பெருமாள்திருமொழி

13) 'அல்கி' – என்பதன் பொருள்

அ) அகன்று ஆ) பள்ளம் இ) தங்கி ஈ) சுற்றம்

14) 'அசைஇ' - இலக்கணக் குறிப்பு

அ) சொல்லிசை அளபெடை ஆ) இன்னிசை அளபெடை

இ) செய்யுளிசை அளபெடை ஈ) ஒற்றளபெடை

15) பாடலில் பயின்று வந்துள்ள அடி எதுகைச் சொற்களைக் குறிப்பிடுக.

அ) அன்று, அவனை ஆ) அல்சேர்த்து, அலகி இ) சேந்த, செப்பம் ஈ) அன்று, கன்று

## பகுதி – II (மதிப்பெண்கள்: 18)

### பிரிவு – 1

எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க:

21-ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

16) விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க:

அ) அறம் செய்வதில் வணிக நோக்கம் இருக்கக் கூடாது என்று சங்ககால மக்களின் கருத்தாக இருந்தது.

ஆ) கல்வியும், செல்வமும் பெற்ற பெண்கள், விருந்தும் ஈகையும் செய்வதாக கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

17) காவடியின் வகைகளைக் கூறுக.

18) ஜெயகாந்தனின் மொழிபெயர்பு நூல்கள் யாவை?

19) காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

20) பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?

21) 'உலகு' – என முடியும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க: **5 x 2 = 10**

22) 'எழுது என்றான்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றான்' என அடுக்குத் தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத் தொடரானது?

23) பொருத்தமானவற்றை சொற்பெட்டியில் கண்டுக எழுதுக:

| காணுதல், காட்சி, நடித்தல், நடிப்பு |
|---|

அ) பசுமையான ______ ஐக் ______ கண்ணுக்கு நல்லது.

ஆ) பொது வாழ்வில் ______ கூடாது ______ இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது?

24) கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர். (கலவைத் தொடராக மாற்றுக)

25) கலைச் சொற்கள் தருக – Philosopher, Humanism .

குறிப்பு: செலவிமாற்றுத் திறனாளர்களுக்கான மாற்று வினா.

வருந்தாமரை - இச்சொல்லைப் பிரித்து பொருள் தருக.

26) தொகைச் சொல்லை விரித்தெழுதி, தொடரில் அமைக்க தண்ணீர்குடி.

27) பொருத்தமான நிறுத்தற் குறியிடுக:

பழங்காலத்தில் பாண்டியன் ஆண்ட பெருமையைக் கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன் - ம.பொ.சி.

28) தணிந்து – பகுபத உறுப்பிலக்கணம் தருக.

## பகுதி – III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு – 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு சுருக்கமாக விடையளிக்க:

29) 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது'

இதுபோல் இளம் பயிர்வகை மூன்றின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க

30) பல்துறை வளர்ச்சியில் மொழி பெயர்ப்பின் பங்கினைக் குறிப்பிடுக.

31) உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன் என்கிறார் ஔவையார். இரவலர் வராவிட்டாலும அவர்களைத் தேடி வரவழைத்தல் ஆடுகோட்பாட்டுச் சேரலாதனின் இயல்பு என்கிறார் நச்செள்ளையார் பேகன் மறுமை நோக்கிக் கொடுக்காதவன் என்றிகறார் பரணர்.

அ) இரவலர் - என்பனத் பொருள் யாது?

ஆ) மறுமை - எனபதன் பொருள் யாது?

இ) ஔவையார் அதியனை எவ்வாறு புகழ்கிறார்?

## பிரிவு – 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க:

(34 – ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்)

32) உயிர்கள் உருவாகி வாழ ஏற்ற சூழல் பூமியில் எவையெனப் பரிபாடல் வாயிலாக நீவிர் அறிந்தவற்றைக் குறிப்பிடுக.

33) ‘இந்தப்பூவை எப்படித் தொடுக்க’ எனக் கவிஞர் உமாமஹேஸ்வரி கூறிய கருத்துக்களை விளக்குக.

34) அடிபிறழாமல் எழுதுக:

i) ‘அருளைப் பெருக்கி’ – எனத் தொடங்கும் நீதிவெண்பா பாடல் (அல்லது)

ii) ‘தூசும் துகிரும்’ எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்

## பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க:

35) சித்திரைத் திங்கள் நிலவொளியில் கடற்கரைக்குச் சென்றேன்; விரிகடலை வியந்து பார்த்தேன்; தாய்சேய் உறவெனத் தாலாட்டியது அந்தக் கடல்

இப்பத்தியில் உள்ள தொகைச் சொற்களின் வகைகளைக் குறிப்பிட்டு விரித்து எழுதுக.

36) குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக:

செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரிய தில்.

37) தீவக அணியைச் சான்றுடன் விளக்குக.

## பகுதி – IV (மதிப்பெண்கள் : 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க:

38) அ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக (அல்லது)

அ) கருணையனின் தாய் மறைவிற்கு, வீரமாமுனிவர் தம் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க

39) அ) தினத்தந்தி நாளிதழ் பொங்கல் மலரில் ‘உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்’ என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, தினத்தந்தி ஆசிரியருக்கு கடிதம் எழுதுக.(அல்லது)

ஆ) உணவுவிடுதி ஒன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும், விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவு பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40) காட்சியைக் கண்டு கவினுற எழுதுக



41) நூலக உறுப்பினர் படிவத்தை நிரப்புக.

42) பழமொழிகளை நிறைவு செய்க

1. உப்பில்லாப் ____________________
2. ஒருபானை ____________________
3. உப்பிட்டவரை ____________________
4. ____________________ அமிழ்தமும் நஞ்சு
5. விருந்தும் ____________________ (அல்லது)

**மொழிபெயர்க்க:**

Among the five geographical division of the Tamil Country in Sangam literature, the Marutham region was the fit for cultivation, as it had the most fertile lands, The property of a formar depended on getting the necessary sunlight, Seasonal rains and the fertility of the soil. Among these elements of nature, Sunlight was considered indispensible by the ancient Tamil.

**குறிப்பு செவிமாற்றுத் திறனாளிகளுக்கான வினா:**

உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

'தப்பு' என்ற தோற்கருவியை இசைத்துக் கொண்டே, அதன் இசைக்கு ஏற்ப ஆடுகின்ற நிகழ்கலையே தப்பாட்டமாகும். ஆண்கள் மட்டுமே ஆடிவந்த இந்த ஆட்டம் தற்போது பெண்களாலும் ஆடப்படுகிறது. இவ்வாட்டம் தப்பாட்டம், தப்பட்டை, தப்பு என்றும் அழைக்கப்படுகிறது. தப்பு என்பது வட்டவடிவமாக அமைந்துள்ள அகன்ற தோற்கருவி, கோவில் திருவிழா, திருமணம், இறப்பு, விழிப்புணர்வு முகாம், விளம்பர நிகழ்ச்சி ஆகியவற்றில் தப்பாட்டம் ஆடப்படுகிறது. 'தப தப்' என்று ஒலிப்பதால், அந்த ஒலியின் அடியாகத் 'தப்பு' எனப் பெயர் பெற்றதெனக் கூறப்படுகிறது.

**வினாக்கள்:**

i) 'தப்பு' – பெயர்க்காரணம் தருக.
ii) ஆண்கள் மட்டுமே ஆடிவந்த எவ்வாட்டம் இன்று பெண்களாலும் ஆடப்பட்டு வருகிறது?
iii) தப்பிற்கு வழங்கப்படுகிற வேறு பெயர்கள் யாவை?
iv) தப்பாட்டம் எங்கெல்லாம் ஆடப்படுகிறது
v) தப்பாட்டம் ஆடும் முறையைக் கூறுக.

## பகுதி – V

**அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்க:**

43) அ) தமிழ்ச்சொல் வளத்தை பயிர்வகைச் சொற்கள் வழிநின்று எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக. (அல்லது)

ஆ) 'எதற்காக எழுதுகிறேன்' – என ஜெயகாந்தன் கூறும் கருத்துக்களை தொகுத்து எழுதுக.

44) 'புயலியே ஒரு தோணி' கதையில் இடம் பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன. (அல்லது)

இராமானுஜர் தம் குருவிடம் திருமந்திரத்தைப் பெற்ற நிகழ்வினையும், அம்மந்திரத்தை அவர் பயன்படுத்திய விதம் பற்றியும் கட்டுரை வடிவில் எழுதுக.

45) அ) குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை ஒன்று வரைக:

முன்னுரை – பொருட்காட்சியின் நோக்கம் - பொருட்காட்சிக்கான இடமும், அமைப்பும் - பொருட்காட்சியின் அரங்கங்கள் - பொருட்காட்சியின் நன்மைகள் - முடிவுரை. (அல்லது)

ஆ) குறிப்புகளைப் பயன்படுத்தி கட்டுரை ஒன்று வகை

முன்னுரை – விண்வெளியில் தமிழரின் அறிவு – கல்பனா சாவ்லா - கல்பனா சாவ்லாவின் முதன் விண்வெளிப் பயணம் - இறுதிப்பயணம் - விண்ணியல் அறிவில் வருங்காலத்தில் மேற்கொள்ள வேண்டியவை – முடிவுரை.

***********